‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.

# 29 திராவிட மாடல் அரசு






# ‘இது ஜெயிக்கிற அணி!’

உலகில் எந்த விளையாட்டுப் போட்டியானாலும், அதற்கென்று தனி ‘உலகக் கோப்பைப் போட்டிகள்’ இருக்கின்றன. அப்படி செஸ் விளையாட்டுக்கான மதிப்புவாய்ந்த போட்டி என்றால், அது பன்னாட்டு செஸ் அமைப்பு (ஃபிடே - FIDE) நடத்தும் ‘உலக செஸ் ஒலிம்பியாட்’ போட்டியைச் சொல்லலாம்.

கொரோனா காலம் முடிந்து, உலகப் பொருளா தாரம் மீண்டு வந்துகொண்டிருந்த நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. அதனால், ரஷ்யாவில் நடைபெற இருந்த போட்டி வேறு நாட்டில் நடைபெற இருந்தது. அந்தப் போட்டியை நடத்தும் வாய்ப்பை மிகக் கச்சிதமாகத் ‘திராவிட மாடல் அரசு’ பெற்றது.

தொடர்ந்து உலகமே திரும்பிப் பார்க்கும் வண்ணம் நமது முதலமைச்சர் ஓர் அறிவிப்பை மார்ச் மாதம் வெளியிட்டார். 44-வது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்த தமிழ்நாட்டுக்கு பன்னாட்டு செஸ் அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது என்பதுதான் அது.

“செஸ் விளையாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது. உலகில் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந் தொடங்கி, இன்றைக்கு பிரக்ஞானந்தா வரையில் தலைசிறந்த செஸ் விளையாட்டு வீரர்களைத் தொடர்ந்து உருவாக்கி வருகிறது தமிழ்நாடு.

இந்த நிலையில், சுமார் 150-க்கும் மேற்பட்ட உலக நாடுகள் பங்குபெற இருக்கும் செஸ் விளையாட்டுப் போட்டி, இதுவரை இந்தியாவில் நடைபெற்ற அனைத்துவித பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் மிகப் பெரியதாக அமைய உள்ளது’’ என்று முதலமைச்சர் தெரிவித்திருந்தார். அப்படியே அமைந்தது அதற்குக் காரணம் முறையான திட்டமிடலும், செயல்வேகமும்தான்.

ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை நடைபெற்றது, அந்தப் போட்டி. எனில், நான்கு மாதங்களில் போட்டிக்கான எல்லா ஏற்பாடுகளையும் உலகத் தரத்தில் செய்து முடித்தது நம் அரசு. அந்த உழைப்புக்கு கட்டியம் கூறும் சாதனையாகவும் ‘செஸ் ஒலிம்பியாட்’ அமைந்தது. இதோ... அந்தச் சாதனைக்கு வயது ஓராண்டு!

## முதலமைச்சரின் முடிவெடுக்கும் வேகம்!

போட்டிக்கான ஏற்பாடுகளை எவ்வாறு குறுகிய காலத்தில் விரைவாகவும், உலகத் தரமாகவும் செய்ய முடிந்தது என்று, அந்தப் போட்டிக்காக நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரி, நம்மிடம் பகிர்ந்து கொண்டதாவது:

“ரஷ்யாவில் இந்தப் போட்டியை நடத்த இயலாது என்று தெரிந்தவுடன் பன்னாட்டு செஸ் அமைப்பு வேறு நாடுகளில் நடத்த முயன்று கொண்டிருந்தது. அப்போது அகில இந்திய செஸ் கூட்டமைப்பு, ‘தமிழ்நாட்டில் இந்தப் போட்டியை நடத்தத் தயாரா?’ என்று நம் அரசைக் கேட்க, அப்படிக் கேட்ட அன்றே ‘முடியும்’ என்று சொல்லி, அடுத்த நாளே அந்தக் கூட்டமைப்பின் தலைவரிடம், ‘போட்டியை நடத்துவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம்’ என்று கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது. நமது முதலமைச்சரின் இந்த முடிவெடுக்கும் வேகத்தைப் பார்த்து வியந்த ‘ஃபிடே’ உடனடியாக நமக்கு வாய்ப்பு வழங்கியது” என்றார்.

## போர்க்காலத் திட்டமிடல்!

இந்தப் போட்டியை நடத்த முதலமைச்சர் தலைமையில் அமைச்சர்கள், அரசுத்துறைச் செயலாளர்கள், உயர் அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய ஒருங்கிணைப்புக் குழு, ஆட்சிப் பணி அதிகாரிகள் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய பணிக்குழு என பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. போட்டி நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்னர் முதலமைச்சர் தலைமையில் அவ்வப்போது ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டே இருந்தன.

போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பாக அதனை விளம்பரப்படுத்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், பேருந்துகளில் ஒலிம்பியாட் இலச்சினை மற்றும் வாசகங்கள் ஒட்டப்பட்டும், சாலை, மின்சாரம், குடிநீர் என அனைத்து அடிப்படை அம்சங்களும் மேம்படுத்தப்பட்டு, வெளிநாட்டில் போட்டி நடப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தின. போட்டி நடைபெற்ற அனைத்து நாட்களிலும் 24 மணி நேர கட்டுப்பாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டு, வீரர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் பூர்த்திச் செய்யப்பட்டன.

ஜூலை 28, 2022 முதல் ஆகஸ்ட் 10, 2022 வரை 44-வது உலகச் செஸ் ஒலிம்பியாட் போட்டி காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பூஞ்சேரி கிராமத்தில் உள்ள ஃபோர் பாயின்ட்ஸ் பை ஷெராட்டன் விளையாட்டரங்கத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது. இதில் 186 நாடுகளிலிருந்து 1,737 வீரர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் நட்சத்திர விடுதிகளில் தங்க வைக்கப்பட்டு, அவர்கள் விளையாட்டரங்கத்துக்குப் போக வர சொகுசுப் பேருந்துகள் பயன்படுத்தப் பட்டன. இந்தப் போட்டிகளுக்காக, தமிழ்நாடு அரசு ரூ.92 கோடியை முதல் பங்களிப்பாக அளித்தது குறிப்பிடத்தகுந்தது.

## உலகமே வியந்த ஒலிம்பியாட்!

போட்டி தொடங்குவதற்கு, சில வாரங்களுக்கு முன்பு சென்னை ஒலிம்பியாட் இலச்சினையாக ‘தம்பி’யை அறிமுகப்படுத்தினார் முதல்வர். ஆஸ்கர் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் செஸ் ஒலிம்பியாட்டுக்கான பாடல் வெளியாகி போட்டியையும் தமிழ்நாட்டின் கலை பண்பாட்டையும் உலகறிய செய்தது திராவிட மாடல் அரசு. ஒலிம்பியாட்டைப் பிரபலப்படுத்த சென்னை நேப்பியர் பாலம், செஸ் அட்டை போன்று கருப்பு வெள்ளைக் கட்டங்களாக வண்ணம் கொண்டது.

தமிழ்நாடு முழுக்க உள்ள அரசுப் பள்ளிகளில் செஸ் போட்டிகள் நடைபெற்றன. அதில் வெற்றி பெற்ற 152 மாணவர்கள், சென்னையிலிருந்து பெங்களூருவுக்கு தமிழ்நாடு அரசு செலவில் தனி விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த மாணவர்கள் நடுவானில், விமானத்தின் உள்ளேயே செஸ் விளையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஒலிம்பியாட் தொடக்க விழாவும், நிறைவு விழாவும் சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடைபெற்றன. தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டார். அந்த விழாவில், திரைப்பட இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில், ‘உலக நாயகன்’ கமல்ஹாசன் குரலில் தமிழர் பண்பாடு மற்றும் விருந்தோம்பல் குறித்த ஒலி-ஒளிக் காட்சி, சர்வதேச வீரர்களை மட்டுமல்லாது தமிழ்நாட்டுத் தமிழர்களையும் நெஞ்சம் நிமிர வைத்தது. நிறைவு விழாவில், தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகளின் அணிவகுப்பு நடைபெற்றதுடன், டிரம்ஸ் சிவமணி உள்ளிட்டோரின் இசைக் கச்சேரியாலும் அரங்கம் அதிர்ந்தது.

எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல், சுமுகமாக இந்தப் போட்டியை நடத்தியதற்குத் தமிழ்நாடு அரசை உலகமே பாராட்டியது. அடுத்து 2023 - மார்ச் மாதத்தில் மகளிருக்கான ‘வுமன் கிராண்ட் ப்ரி’ எனும் போட்டியை ‘ஃபிடே’ டெல்லியில் நடத்தியது. அந்தப் போட்டியின் ஏற்பாடுகள் சரியில்லை என்று சொல்லி வீராங்கனைகள் சிலர் போட்டியிலிருந்து விலகினர். அப்போது ‘வுமன் கிராண்ட் ப்ரி’ போட்டி ஏற்பாட்டையும் திராவிட மாடல் அரசு நடத்திய செஸ் ஒலிம்பியாட் ஏற்பாடுகளையும் ஒப்பிட்டு தமிழ்நாட்டு மக்களின் விருந்தோம்பலை வெகுவாக பாராட்டி சமூக வலைதளங்களில் வீராங்கனைகள் பதிவிட்டனர்.

‘திராவிட மாடல்’ என்பது என்ன என்று அப்போதாவது அவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். அதைத் தொடர்ந்தது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஸ்குவாஷ், ஹாக்கி உட்பட பல்வேறு போட்டித் தொடர்களைச் சிறப்பாக நடத்தி வருகிறது. இன்னும் பல சாதனைகள் படைக்கப்பட இருக்கின்றன. அதற்கான ஒரு முன்னோட்டம்தான் இந்த ஒலிம்பியாட். விளையாட்டுத் துறையை ‘விளையாட்டாக’க் கையாளமாட்டோம் நாம். ஏனென்றால், ‘இந்தியா’வில் இது ஜெயிக்கிற அணி..!

...சாதனை தொடரும்

## பொறுப்பற்ற புல்டோசர் அரசியல்!

வகுப்புவாத, வெறுப்பு சக்திகளின் கைகளில் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும் என்பதை, ஹரியானா மாநிலத்தில் நடக்கும் சம்பவங்கள் காட்டுகின்றன. அங்குள்ள நூஹ் மாவட்டத்தில் ஆளும் பா.ஜ.க. அரசின் ஆதரவுடன் ஊர்வலம் நடத்தி, கலவரத்தை உருவாக்கினர் பா.ஜ.க. சார்பு அமைப்புகள். காவல்துறை ஒத்துழைப்புடன் காவி அமைப்புகளின் போர்வையில் இருந்த குண்டர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திய காட்சிகள் வெளியாகி அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளன.

பொருட்சேதம், உயிர்சேதத்துடன் அச்சத்தில் வாழும் சிறுபான்மை மக்கள் மீது தற்போது அரசும் மிகப் பெரிய தாக்குதலை நிகழ்த்தி வருகிறது. கலவரம் நடந்த பகுதியில் உள்ள சிறுபான்மை மக்களின் குடியிருப்புகளை புல்டோசர் இயந்திரம் கொண்டு அரசு இயந்திரம் இடித்துத் தரைமட்டமாக்குகிறது. ஆக்கிரமிப்பாளர்கள், அகதிகள் என்கிற விளக்கங்களுடன் அவர்களை அந்த இடங்களில் இருந்து அப்புறப்படுத்தும் பணிகளைச் செய்கின்றனர். இந்த நடவடிக்கைகளை அங்குள்ள ஜனநாயக சக்திகள் எதிர்க்கத் தொடங்கியுள்ளன. சட்டத்தை நிலை நாட்ட வேண்டிய ஆட்சியாளர்களே, புல்டோசர் அரசியல் என புதிய தாக்குதலை நடத்துகின்றனர் என குற்றம் சாட்டுகின்றனர். இரட்டை இன்ஜின் ஆட்சியில், மக்களின் துயரங்களுக்கு தீர்வில்லை. நிராதரவாக நிற்கும் மக்களின் கண்ணீர், பா.ஜ.க அரசாங்கத்தின் கோட்டைகளைத் தகர்க்கும்.

## ஃப்ளாஷ்பேக்





புகழேந்தி

### நீண்ட நாள் ஆசை!

1987-ஆம் ஆண்டு, கழகத்தின் சிங்கம்புணரி ஒன்றியத் துணைச் செயலாளராக என் தந்தை பொறுப்பிலிருந்தார். அப்போதிலிருந்தே தலைவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டு. ஆனால், பலமுறை முயன்றும் முடியாமல் போனது. 1993-ஆம் ஆண்டு, டிசம்பரில் அந்த வாய்ப்பு அமைந்தது. கழகம் பிளவை சந்தித்திருந்த காலக் கட்டம் அது. அண்ணா அறிவாலயத்தில் என் சகோதரர்களுடன் தலைவரை நேரில் சந்தித்தேன். ஊர் பற்றியும், கல்வி விவரம் குறித்தும் விசாரித்தார். அதற்குப் பிறகு இந்தப் புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.

**-ஆர்.புகழேந்தி, தி.மு.க. அயலக அணி மாவட்டத் துணை அமைப்பாளர், சிங்கம்புணரி சிவகங்கை மாவட்டம்**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing @dmk.in

## கருவூலம்

### இந்தி-குதிரை

**1979-ஆம் ஆண்டு ஜனவரியில் அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் சென்னை வந்திருந்தார். மொழிப் பிரச்சினை தொடர்பாகப் பேசுகையில், ‘இந்தியைக் கற்றுக் கொள்வது இந்தியர்களின் கடமை’ என்றதுடன், "இந்தி செத்த குதிரை. அதை ஏன் திரும்பத் திரும்ப அடிக்கிறீர்கள்" என்றார். தேசாயின் மொழி பற்றிய அந்தப் பேச்சுக்குக் கழகம் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. திருச்சியில் விழா ஒன்றில் பேசிய கலைஞர், "குதிரைகள் ஓடிய களைப்பில் தூங்கும்போது, அதைப் பார்க்கிற சிலருக்கும் குதிரை செத்துவிட்டதாகத் தோன்றும். களைப்பு நீங்கியதும் எழுந்து முன்பை விட வேகமாகப் பாயும் ஆற்றல் ஏற்படும். ஆகவே தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு என்பதும், களைப்பு நீங்கிய குதிரையாக எழுந்து நிற்கிறது. இந்தியைத் திணிக்க முயற்சிக்கும் போதெல்லாம் எழுந்து நிற்கும்" என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 202




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131